


மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், சமூக நலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ், பாரம்பரிய உணவு திருவிழா நிகழ்ச்சி நாகர்கோவில் தென் திருவிதாங்கூர் இந்து கல்லூரியில் இன்று (15.07.2016) நடைபெற்றது.

செ.வெ.எண்: 453/2016 நாள்: 15.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பாரம்பரிய உணவு திருவிழா இன்று (15.07.2016) நடைபெற்றது.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, சமூக நலத்துறை மற்றும் சத்துணவு திட்டத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின்கீழ், கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் தென் திருவிதாங்கூர் இந்து கல்லூரியில் பாரம்பரிய உணவு திருவிழா இன்று 15.07.2016 முதல் 17.07.2016 வரை மூன்று நாட்கள் நடைபெறுகிறது. தொடக்க நாளான இன்று மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், விழாவிற்கு தலைமையேற்று, பாரம்பரிய உணவு திருவிழா நிகழ்ச்சியினை குத்துவிளக்கேற்றி, தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது:-

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, கன்னியாகுமரி மாவட்டத்தில் பாரம்பரிய உணவு திருவிழா நிகழ்ச்சி இன்று முதல் மூன்று நாட்கள் நடைபெறுகிறது. இதில் பழங்காலத்தில் உள்ள உணவு பழக்க, வழக்கங்கள் பற்றிய கண்காட்சி பொதுமக்களின் பார்வைக்கு வைப்பதோடு, சிறு தானிய உணவுகளுக்கான அரங்குகள் அமைக்கப்பட்டு, உணவுகள் வைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு சிறப்பு விருந்தினர்கள் மூலம் பாரம்பரிய உணவின் முக்கியத்துவம் குறித்து, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு விளக்கவுரை ஆற்ற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

15.07.2016 இன்று பாரம்பரிய உணவின் முக்கியத்துவமும், இன்றைய உணவின் தீமைகளும் குறித்து திரு. ராஜா முருகன் அவர்களும், இயற்கை விவசாயம் குறித்து திரு. இசக்கி நடராஜன் அவர்களும், மருந்தல்லா மருத்துவம் குறித்து திரு. மாறன் அவர்களும், 16.07.2016 அன்று நமது உணவே நல்ல உணவு குறித்து திரு. சிவகுமார் அவர்களும், உணவுக்குள் இருக்கும் சிக்கல்கள் குறித்து திரு. அரசலூர் செல்வம் அவர்களும், எது உணவு குறித்து திரு. குமார் அவர்களும், குழந்தைகள் உணவும் அதனை தயாரிக்கும் முறையும் குறித்து திரு. பாஸ்கர் அவர்களும், இயற்கை வைத்தியம் குறித்து திருமதி. மேனகா, திருமதி. கல்பனா தனகோபால் ஆகியோர்களும், இயற்கை வேளாண்மை குறித்து திரு. பாமையன் அவர்களும், பாரம்பரிய நெல் வகைகள் குறித்து திரு. நெல் ஜெயராமன் அவர்களும் பேச உள்ளார்கள்.

மேலும் பாரம்பரிய உணவு திருவிழாவை முன்னிட்டு பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு பேச்சு போட்டி, கட்டுரை போட்டி மற்றும் ஓவிய போட்டிகள் நடத்தப்பட்டு, சிறந்த மாணவ, மாணவியர்களை தேர்வு செய்யப்பட்டு, பரிசுகள் வழங்கப்படுகிறது. மேலும் குழந்தைகள் மற்றும் பொதுமக்களுக்கான போட்டிகள் மற்றும் பாரம்பரிய விளையாட்டுகள் குறித்து அரங்குகள் அமைக்கப்படுகிறது. நாள்தோறும் வீட்டு தோட்டம், சித்த மருத்துவம், யோகா மற்றும் உணவு பாதுகாப்பு குறித்து கருத்துரை இடம் பெறுகிறது. இந்த உணவுத் திருவிழாவில் கலந்து கொள்ளும் திருவிதாங்கோடு - முஸ்லீம் கலை கல்லூரி, கோட்டார் - அரசு ஆயுர்வேத சித்த மருத்துவ கல்லூரி, அகஸ்தீஸ்வரம் - விவேகானாந்தா கல்லூரி, தேரேகால்புதூர் கலைவாணர் என்.எஸ்.கே. பொறியியல் கல்லூரி, இறச்சக்குளம் - பொன்ஜெஸ்லி பொறியியல் கல்லூரி, கோணம் - அரசு பொறியியல் மற்றும் தொல்நுட்ப கல்லூரி, ஒழுகினசேரி - அரசு காப்பகம் ஆகிய கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கு சிறு தானியத்தில் செய்யப்பட்ட உணவு வகைகள் வழங்கப்பட இருக்கிறது.

எனவே பாரம்பரிய உணவு திருவிழா நிகழ்ச்சியில் பொதுமக்கள் அதிகளவில் கலந்து கொண்டு பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக்கொண்டார்.

நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) திரு. நிஜாமுதீன், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி. பேச்சியம்மாள் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், கல்லூரி பேராசிரியர்கள், மாணவ, மாணவியர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,கன்னியாகுமரி மாவட்டம்.